DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 933 of 2025 |
| Deposition of witness for | : | PW 6 |
| Name | : | நந்தகுமார் |
| Father's Name | : | K.மனோகரன் |
| Village | : | அரூர் |
| Taluk | : | மோனூர் |
| District | : | நாமக்கல் |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 14th day of May 2026.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

எனது பூர்வீகம் நாமக்கல் மாவட்டம் ஆகும். நான் சம்பவ சமயத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் இன்டஸ்டிரியேட் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். சுமார் 10 வருடத்திற்கு முன்பு நான் அலுவலகத்தில் இருந்தபோது பர்கூரிலிருந்து வந்த ஈச்சர் வாகனம் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். மறுநாள் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

விபத்தில் இறந்துபோன பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். இறந்துபோன பெண்மணி குறுக்கே வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் தெரியவில்லை. நான் விபத்தை பார்க்கவில்லை. இந்த விபத்து சம்பந்தமாக போலீசார் காவல் நிலையத்தில் தான் என்னிடம் கையெழுத்து

வாங்கினார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த அடுத்த நாளே காவல் நிலையத்திற்கு சென்று கையெழுத்து போட்டேன். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான் மெய்ஞானம், மதுசூதனன், லோகநாதன் ஆகியோர் ஒரே கம்பெனியில் வேலை செய்கிறோம் என்றால் சரிதான். எங்கள் கம்பெனியின் உரிமையாளர் சொன்னதால் காவல் நிலையம் சென்று கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.